| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
| --- | --- |

செ.வெ.எண்: 21 நாள்:16.06.2021

# *கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இணையதளம் வாயிலாக பெறப்பட்ட தகுதியான மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.*

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (16.06.2021) ஓசூர் வட்டத்திற்குட்பட்ட ஓசூர் நகர்புரம், ஓசூர் கிராமபுரம், ரங்கபண்டித அக்ஹாராம், சென்னத்தூர் வடக்குபகுதி, சென்னத்தூர் தெற்கு பகுதி, ஆவலப்பள்ளி, நல்லூர், பேகேப்பள்ளி, கோவிந்த அக்ரஹாரம், ஜூஜுவாடி, சாந்தபுரம் அக்ரஹாரம், அனுமேபள்ளி மற்றும் மூக்கொண்டப்பள்ளி ஆகிய கிராமங்களுக்கான 1430 ஆம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.

அதன்படி, வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) முதல் நாள் நிகழ்ச்சியில் 13 வருவாய் கிராமங்களுக்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து இணையதளம் மூலம் உட்பிரிவு, குடும்ப அட்டை, பட்டதாரி சான்றிதழ், முதியோர் உதவித்தொகை, வாரிசு சான்று, உடல் ஊனமுற்றோர் உதவித்தொகை, விதவை உதிவத்தொகை போன்ற 34 - மனுக்கள் வரப்பெற்றதை தொடர்ந்து , தகுதியான மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், ஓசூர் வட்டத்தில் **"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்"** திட்டத்தின் கீழ் இணையதளத்தின் மூலம் வீட்டுமனை பட்டா வேண்டி 157 மனுக்களும், பிற மனுக்கள் 11, சரியான முகவரி, தொலைபேசி எண்கள் இல்லாத 18 மனுக்கள் என மொத்தம் 186 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. இதில், ஓசூர் உள்வட்டத்தில் 115 மனுக்களும், மத்திகிரி உள்வட்டத்தில் 51 மனுக்களும் மற்றும் பாகலூர் உள்வட்டத்தில் 2 மனுக்களும் வரபெற்றுள்ளது. இம்மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும், சரியான முகவரி, தொலைபேசி எண்கள் இல்லாத 18 மனுக்களை ஆய்வு மேற்கொண்டு சரியான மனுக்களை பெற்று தகுதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட 13 கிராமங்களை சேர்ந்த கிராம கணக்கு பதிவேடுகளான அ - பதிவேடு, எப்.எம்.பி. பதிவேடு, அடங்கல், 1 - ஏ - உள்ளடக்கம், பட்டா மற்றும் புறம்போக்கு பதிவேடு, தனிபட்டா, சிட்டா மற்றும் போதுஅடங்கல், பண வரவு பதிவேடு உள்ளிட்ட பதிவேடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, பர்கூர், போச்சம்பள்ளி, சூளகிரி, தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி மற்றும் ஓசூர் உட்பட 8 வட்டங்களில் இன்று(16.06.2021) முதல் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற உள்ளது. எனவே, பொதுமக்கள் கொரோனா பெருந்தொற்று நோய் காலம் என்பதால் பொது மக்களின் நலன் கருதி ஜமாபந்தி அலுவலர்களிடம் நேரடியாக மனுக்களை அளிக்காமல் பொதுமக்கள் அனைவரும் தங்களது கோரிக்கை மனுக்களை **https://gdp.tn.gov.in/jamabandhi/** என்ற இணைய வழியில் பொதுமக்களே சுயமாக மனு செய்து கொள்ளலாம்.

மேலும், அரசு வகுத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, முககவசம் அணிதல், சமூக இடைவெளி கடைப்பிடித்து அரசு இ-சேவை மையம் மூலமாகவும் இணைய வழியில் 10.06.2021 முதல் 31.07.2021 வரை மனுக்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். பொதுமக்களின் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உடனடி தீர்வு காணப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வன அலுவலர் திரு.எஸ்.பிரபு இவப, ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திரு.சேதுராமலிங்கம், ஓசூர் வட்டாட்சியர் திரு.ச.செந்தில்குமார் உட்பட துறை சாந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.

| | |
|---|---|
| முககவசம் அணிவீர் | தனிமனித இடைவெளி கடைப்பிடிப்போம் |